12

திரிசங்கு

அனுராதாவுக்குத் தலைவலி மண்டையைப் பிளந்தது. ஒரு மணி நேரமாக முணுமுணுவென்றிருந்தது. இப்பொழுது பளிச் பளிச் என்று வலித்தது. பசியாக இருக்கலாம். மதியம் ஒரு மணிக்குச் சாப்பிட்டது. அதுவும் முழுசாகக் கூடச் சாப்பிட முடியவில்லை. எடிட்டர் அவசரமாகக் கூப்பிட்டார் என்று ஓட வேண்டியிருந்தது.

அதுவும் என்ன, எடிட்டரின் முகம் எப்பவும் பிரசன்னமாக இருக்கும் என்று சொல்ல முடியாது. அவரது பிரச்னைகள், ஏமாற்றங் கள், இயலாமைகள் எல்லாம் அவள் மேல்தான் வெடிப்பதாக அனுவுக்கு எண்ணம். இந்த லே அவுட் ஏன் இப்படி இருக்கிறது? இந்த ட்ராப் லெட்டர் ஏன் இப்படித் தொங்கிப் போய் விட்டது? இந்தப் புகைப்படம் ஏன் தெளிவாக இல்லை? இத்யாதி. அல்லது, அனு. நேற்று குரியரில் அனுப்பியது மெட்ராசுக்குப் போய்ச் சேரவில்லை. குரியர் ஸர்வீஸ்காரர்களைப் பிடித்து விரட்டு; காஜியாபாதுக்குப் போன வண்டி வழியில் பிரேக்டவுனாம். வேறு வண்டி அனுப்பு...

எடிட்டருக்கு அதிகம் வயசாகவில்லை. சுமுகமான சமயத்தில் சுரேஷ், வா, போ, என்று அழைப்பதுதான். அவனும் 'டீ குடிக்கிறாயா, சொமாசா வரவழைக்கட்டுமா? என்று கேட்பவன்தான். ஆனால்

பத்திரிகை வெளியாகிற வரை இருக்கும் டென்ஷனில் சுமுகம் என்னும் வார்த்தையை அகராதியில் தேட வேண்டியிருக்கும். பொறுக்கிப் பதினைந்து பேர்கள் அங்கு. எல்லாரும் மற்றவர் குரல் வளையை அமுக்குவார்கள். ஆண் பெண் என்கிற பேதம் கிடையாது. எந்த வேலையையும் இரவு எத்தனை மணி நேரமானாலும் பத்திரிகை வெளியாகிறவரை அலுவலகத்தில் இருந்து செய்தாக வேண்டும்.

'எனக்கு ஐந்து வயதுக் குழந்தை இருக்கிறான் சுரேஷ். என் மாமியார் முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்கிறார் சுரேஷ்' என்று சொல்ல முடியாது.

'இந்தக் கதையெல்லாம் எங்கிட்ட சொல்லக் கூடாது. ஆணுக்குச் சமனா வேலை வேணும், உரிமை வேணும் என்கறீங்க. இந்த வேலை யிலே ஓர் ஆண் இருந்தான்னா எத்தனை சம்பளம் கொடுப்பேனோ அதைத்தான் உனக்கும் கொடுக்கிறேன். அவன்கிட்ட எப்படிப்பட்ட உழைப்பை எதிர்பார்ப்பேனோ அதே உழைப்பை உங்கிட்டயும் எதிர்பார்ப்பேன். இந்த வேலை இப்படித்தான். ராத்திரியெல்லாம் உட்கார்ந்து வேலை செய்ய வேண்டியிருக்கும். ராத்திரி நேரமானால் வீட்டுக்குப் போக ஆபீஸ் வண்டி கிடைக்கும். நீ பெண் என்கிற தனாலே வேற எந்தச் சலுகையும் கிடையாது' என்று அவன் முதல் நாளே தெரிவித்து விட்டான். அறிவார்த்தமாக அவன் சொல்வது சரியாகத்தான் இருந்தது. தர்க்கம் செய்யும் படியாகத் தோன்றவில்லை. எந்தச் சவாலையும் ஏற்கலாம் என்கிற வாலிப முறுக்கு இருந்தது. அவளுக்குப் பிடித்தமான பத்திரிகை வேலை. கைநிறைய சம்பளம். தலை கிறுகிறுக்கும் வரை உற்சாகமாய்ச் சுழல முடிந்தது.

அதாவது கல்யாணமாகும் வரை. முக்கியமாகக் குழந்தை பிறக்கும் வரை. அருண் நவயுகத்தைச் சேர்ந்தவன்தான். அவனைக் காதலித்து, அவளுக்கு அவளது அலுவலக வேலையில் இருக்கும்,

நாட்டத்தைப் புரிந்து கொண்டு கல்யாணம் செய்து கொண்டவன். அவளுக்குக் கிடைக்கும் நாலாயிரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்த வன். திருமணத்துக்குப் பின்னும் வேலையைத் தொடர வேண்டும் என்று வற்புறுத்தியவன். வீட்டில் இருக்கும் பெண்களை விட வேலைக்குச் செல்லும் பெண்கள் அதிக 'ஸ்மார்ட்டா'னவர்கள், கவர்ச்சியானவர்கள் என்று நம்புபவன்.

''கொஞ்சம் அட்ஜஸ்ட்மெண்ட் தான் தேவை. என் ஒத்துழைப்புப் பூரணமாக இருக்கும்'' என்கிற உறுதிமொழியுடன் திருமணம் செய்து கொண்டான்.

சும்மா சொல்லக் கூடாது. அருண் சொன்னபடி நடந்தான். இத்தனைக்கும் பழமைவாதக் குடும்பப் பின்புலத்தைச் சேர்ந்தவன். அவனுடைய அம்மா உண்மையில் படிதாண்டாப் பத்தினி. காதல் கல்யாணத்தை ஒப்புத்துக் கொண்டதே பெரிசு. காதல் என்றதுமே முகத்தைச் சுளுக்கியவர்கள் அனுவைப் பார்த்ததும் பிரசன்ன மானார்கள். அவர்கள் குடும்பத்தில் பெண்கள் வேலைக்குப் போகும் பழக்கம் இல்லைதான். ஆனால் மருமகளுக்கு நாலாயிரம் சம்பளம் என்று சொல்லிக் கொள்ளப் பெருமையாகவும் இருந்தது. அதைத் தவிர பெரியவர்கள் இருப்பது பீஹாரில். குழந்தைகள் குடித்தனம் செய்வது தில்லியில். அவர்கள் பாடு, இந்தக் காலத்துக் குழந்தைகள் எதைத்தான் சமாளிக்க மாட்டார்கள்?

சமாளிக்க முடிந்தது சில மாதங்களுக்கு. இரண்டே பட்சிகள். நினைத்தால் சமையல். அதுவும் ஒரே வேளை. இல்லாவிட்டால் ஹோட்டல் சாப்பாடு. பத்திரிகை அச்சாகி வரும் வாரம் முழுவதும் இரவு அவன் தனியாகத்தான் சாப்பிடுவான். இரவு இரண்டு மணிக்கு அவள் மாற்றுச்சாவி போட்டு வீட்டுக்குள் நுழையும்போது அவன் அநேகமாய் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பான். மறு நாள் அவள் எழுந்திருக்கும் சமயத்தில் அவளுக்கும் காலை ப்ரெட் டோஸ்ட் வைத்துவிட்டு அவன் அலுவலகத்துக்குக் கிளம்பியிருப்பான். சில

நாட்களுக்கு அவளைச் சொல்லத் தெரியாத குற்ற உணர்வு அழுத்தும். 'நான் ரொம்ப மோசமான மனைவி' என்று அலுவலகத் தோழிகளிடம் - எல்லோரும் கல்யாணமாகாதவர்கள் - அங்கலாய்ப்பாள். அவர்கள் சிரிப்பார்கள். 'எத்தனை படிச்சிருந் தாலும், எத்தனை பெரிய உத்தியோகம் பார்த்தாலும் பெண் களுடைய பத்தாம் பசலித்தனம் போகாது' என்பார்கள். 'இதெல்லாம் நம்ம வளர்ப்பினாலே வர்றது. பிறப்பிலே நாம இரண்டாம் பட்சமானவர்கள் என்கிறதாலே இல்லே' என்கிற சமூகவியல் தத்துவ விளக்கம் சொல்வார்கள். 'உனக்குப் பதிலா அருண் இந்த வேலையைச் செய்யறான்னு வெச்சுக்கோ, அவன் இப்ப வீட்டிலே செய்யறதை விட நீ அதிகமாகவே செய்வே. ராத்திரி முழிச்சிருந்து அவனுக்காகக் காத்திருப்பே சூடா சாப் பாட்டோட. நேரங் கழிச்சு வர்றோமேன்னு அவனுக்குக் குற்ற உணர்வு ஏற்படாது. உனக்கும் தப்பாத் தோணாது. இப்ப மட்டும் உனக்கு ஏன் தோணணும்? உன் வேலை அப்படி. அதுக்கு நீ என்ன செய்ய முடியும்?'

அவளுக்குச் சந்தேகம் தோன்றும் போதெல்லாம் உற்சாக மூட்ட சினேகிதிகள் நல்ல வேளை இருந்தார்கள்.

மனசிற்குள் எந்தக் குறையும் இல்லாதவனைப் போலத்தான் அருணும் நடந்துகொண்டான். இப்படிப்பட்ட நவயுக தம்பதிகள், பரஸ்பரம் உணர்ந்து கொண்ட தம்பதிகள் யாரும் இருக்க மாட்டார்கள் என்று அவள் இறுமாந்து போனாள்.

குழந்தை பிறக்கும் வரை. கர்ப்பமாக இருக்கும் போது வெகு நேரம் அமர்ந்து வேலை பார்ப்பது சிரமமாக இருக்கும். சுரேஷ் அதை உணர்ந்து கொண்டவனாய், ஆண் பெண் என்கிற விவாதத்தில் ஈடுபடாமல் அவளை இரவு எட்டரை மணிக்கு மேல் இருக்க வேண்டாம் என்று அனுப்பி விடுவான்.

'குழந்தை பிறந்த பிறகு நோ கன்ஸஷன்!' என்கிற கண்டிஷனுடன்.

குழந்தை பிறந்தது. ஏராளமான கனவுகளுக்கு வித்திட்டது. மெட்டர்னிட்டி லீவு முடிகிறவரை ஆனந்தமாக இருந்தது. வேலைக்குப் போகும் மருமகளுக்கு உதவியாகக் குழந்தையைப் பார்த்துக்கொள்ள மாமியார் ஊரிலிருந்து வந்தாள். அன்றிலிருந்து நிம்மதி போய் விட்டது.

மாமியார் பொல்லாதவள் இல்லை. நல்லவள். நல்ல இதயம் உள்ளவள். இவ்வளவு நல்ல மாமியார் இத்தனை வேலை செய்ய வேண்டியிருக்கிறதே என்று அனுவுக்குக் குற்ற உணர்வு ஏற்பட்டது. வயசான காலத்தில் அம்மாவிற்கு வீட்டுப் பொறுப்பைக் கொடுக்கும் படி ஆயிற்றே என்று அருணுக்கும் தோன்றுவது அடிக்கடி அனு வின்மேல் அவன் எரிச்சல் பட ஆரம்பித்ததில் தெரிந்தது. நல்ல மாமியாரும் முணுமுணுக்க ஆரம்பித்தாள். 'குழந்தையைக் கூடக் கவனிக்க முடியாதபடி அப்படி என்ன வேலை' என்றாள். 'ஏதோ ஆபீஸ் உத்தியோகம் இருக்கும்தான். ஒன்பது பத்து மணியிலேர்ந்து அஞ்சு மணி வரை. இதென்ன வேலை, நடு ராத்திரியிலே வர்ற வேலை?' என்று குடைந்தாள். 'கண்ட நேரத்துக்கு ஒரு பொம்பளை தனியா வந்து வீட்டு வாசல்லே வண்டியிலே வந்து இறங்கறது - நல்லாவா இருக்கு? அதென்ன வேலை அது?' என்று சந்தேகப் பட்டாள். 'உலகம் தலை கீழாயிட்டது' என்று அங்கலாய்த்தாள்.

அவளுடைய அங்கலாய்ப்பு அருணை வாட்டுவது ஸ்பஷ்ட மாகக் கொஞ்ச நாட்களாகத் தெரிகிறது. ''அம்மா சொல்றது சரிதான்!'' என்கிறான். 'இப்பொழுது குழந்தைக்கு உன் கவனிப்பே இல்லாமல் போயிட்டது. இந்த வேலை நமக்குச் சரிப்படாது. வேற வேலை கிடைக்காமலா போகும்? இந்த வேலையை விட்டுடு. இல்லே ஒன்பது மணியிலேந்து அஞ்சு மணி வரைதான் செய்ய முடியும்னு கண்டிஷனாச் சொல்லிடு.'

அவளுக்குத் தெரியும். இந்த அலுவலகத்தில் அப்படியெல்லாம் கண்டிஷனாகப் பேச முடியாது. மாமியார், குழந்தை, கணவன் என்கிற காரணங்கள் பத்தாம் பசலிக் காரணங்கள். எந்த ஆணும் அந்தமாதிரிக் காரணங்கள் சொல்லி அலுவலகத்தில் சலுகைகள் கேட்கமாட்டான். அவனுக்குச் சமானமானவள் பெண் என்கிற கட்சிக்கு இப்படிப்பட்ட சால்ஜாப்புகளின் நினைப்பே பலவீனமானது. 'உன்னால் செய்ய முடியவில்லையென்றால் வேலையை நீ விட வேண்டியது தான்' என்பான் சுரேஷ். 'உன் இடத்தில் எதிர்காலப் பிரச்னைகளைத் தவிர்க்க ஓர் ஆணையே போடுகிறேன்' என்பான். அவனுக்கென்ன நஷ்டம்? இந்த வேலைக்கு ஆயிரம் பேர்கள் காத்திருக்கிறார்கள்.

'வேறு வேலை கிடைக்கும்' என்கிறான் அருண், அது ஏதோ கடையில் விற்கும் பண்டம் போல. கிடைக்குமா என்று அவளுக்குக் குழப்பமாக இருந்தது. இங்கிருக்கும் தோழமை நிறைந்த சூழல் எங்கும் இருக்காது என்று தோன்றிற்று. சுரேஷ் கண்டிப்பானவனாக இருந்தாலும் நல்லவன். கண்யமானவன். கஞ்சத்தனமில்லாதவன்.

ஆனால் இந்த வேலையில் அவள் நீடித்திருக்க முடியாது. நேற்று வீட்டில் பெரிய ரகளை ஆகிவிட்டது. நேற்றைய குழந்தை இன்றைக்கு ஐந்து வயதுப் பாலகன். பள்ளிக்குச் செல்பவன். நேற்று அவனுடைய வகுப்பு ஆசிரியை, ஒரு குறிப்பு எழுதி அனுப்பினாள். 'உங்கள் மகன் சரியாகப் படிப்பதில்லை. வீட்டில் யாரும் கவனிப் பதில்லையா?' என்ற குறிப்பு.

குடும்பக் கௌரவமே பறி போனதைப் போல் அருண் துடித்துப் போனான். ''நீ வேலை செஞ்சது போதும். முதல்லே ராஜினாமா செய்து விட்டுப் பிள்ளையைக் கவனி'' என்றான் அனாவசியப் படபடப்புடன். மாமியார் எதிரில் இருக்கிறாள் என்கிற காரணத் தாலும், டீச்சரின் குறிப்பைப் பார்த்து ஏற்பட்ட கலவரத்தாலும் அனு பேசாமல் இருந்தாள். பிறகு அவர்கள் தனியாக இருக்கும்போது கேட்டாள்.

''ஏன், நான் ஏன் வேலையை விடணும்? குழந்தைக்காக வேலையை விடுன்னு நான் உன்னைச் சொல்றேனா?''

அருணுக்கு அசாத்திய கோபம் வந்தது. அதுவரை அவள் கண்டிராத கோபம்.

''இந்தப் பெண்ணுரிமைப் பேச்செல்லாம் எனக்கு வேண்டாம். உன்னுடைய சுதந்திரத்துக்காக நான் என்னுடைய தேவைகளைத் தியாகம் செய்ய முடியும். ஆனா குழந்தையும் தியாகம் செய்யணும்னு நீ எதிர்பார்க்க முடியாது. அவனை நீதான் கவனிக்கணும். எல்லாப் பொறுப்பையும் மத்தவங்க தலையிலே கட்டப் பார்க்காதே. என் பொறுமை நழுவிப் போயிட்டது.''

அருணின் பேச்சும் கோபமும், அவளை உலுக்கி விட்டது. அவனை எதிர்த்து வாதாட முடியாமல் அவளுள் ஒரு பலவீனம் புகுந்து கொண்டது. அதற்குக் காரணம் வேறு. அவன் பேச்சில் உண்மை தொனித்தது. அவளுடைய வேலை அவனுக்கு எத்தனையோ விதத்தில் அசெகர்யமாக இருந்தாலும் அவன் அவள் சுதந்திரத்தில் குறுக்கிடக் கூடாது என்று பேசாமல் இருந்திருக்கிறான். 'அவள் பெண். ஒரு தாய் என்பதால்தான் அவன் அவளை வேலையை விட்டு விடு' என்று ஒரு பிரச்னை முளைத்ததுமே சொல்கிறான் என்பது வேறு விஷயம். உலகத்தின் நியதி அது. ஆண் சம்பாதிக்க, பெண் குடும்பத்தைப் பேண வேண்டும். நான் ஏன் வேலையை விடவேண்டும். நீ விடேன் என்று அவள் வாதாட முடியாது. மாமியார் மட்டும் அந்த வாதத்தைக் கேட்டுக் கோபப்பட மாட்டாள். சுற்றும் சூழலுமே கோபப்படும். 'வேலைக்கே போகாதே' என்று அருண் சொல்லவில்லை. இந்த வேலையை விடு என்றுதான் சொல்கிறான்.

போன் அடித்தது. அவள் அலுப்புடன் எடுத்தாள். மறு முனையில் அருணின் குரல் ஒலித்தது.

''ரிஸைன் பண்ணிட்டியா?'' என்றான்.

''இல்லே அருண்'' என்றாள் அவள் தயக்கத்துடன்.

''ஏன் இல்லே. காலையிலே நீ கிளம்பும்போது அத்தனை சொன்னேனே? இதப் பார் அனு. உனக்குப் புருஷனும் குழந்தையும் முக்கியமா? இல்லே அந்த பிஸாத்து வேலை முக்கியமான்னு யோசிச்சு நீயே முடிவு பண்ணு.''

''இது பிஸாத்து வேலையில்லே அருண்!'' என்றாள் அவள் ரோசத்துடன்.

''உன் குடும்ப சந்தோஷத்துக்கு முன்னாலே அது பிஸாத்து தான்'' என்றான் அவன் ஆத்திரத்துடன். ''ஆனா எங்களுக்கு எத்தனை மதிப்பு குடுக்கறேங்கறதைப் பொருத்திருக்கு அது. நீ ரிஸைன் பண்ணல்லேன்னா அது நம்ம வாழ்க்கையை ரொம்பப் பாதிக்கப் போகிறது'' என்று அவன் ஆங்கிலத்தில் படபடத்து விட்டு, போனை டப்பென்று வைத்தான். இப்படியே சென்றால் கடைசியில் இது விவாகரத்தில்தான் முடியும் என்கிற கலவரம் அவளுக்கு ஏற்பட்டது. அருணும் குழந்தையும் இந்த வேலையை விட முக்கியமான வர்கள்தான். பெண்ணுரிமை பிரச்னை? இங்கிருக்கும் பெண்கள் திருமணமான பிறகு அதன் பரிணாமத்தைப் புரிந்து கொள்வார்கள்.

சுரேஷ் அவள் கவலையைப் புரிந்து கொண்டான். 'உன் வேலை, உன் குடும்ப வாழ்க்கையைப் பாதிக்கிறது என்றால் நீ ரிஸைன் செய்வதைத் தவிர வேறு வழியில்லை. ஸாரி, ஒன்பதி லிருந்து ஐந்து என்கிற வேலை இங்கு இல்லை. இத்தனை நாட்கள்

எனக்கு நீ வேலை செய்ததற்கு ரொம்ப நன்றி. நீ மீண்டும் வந்து சேர வேண்டும் என்றால் தயங்காமல் திரும்பி வரலாம்' என்று விடை கொடுத்தான்.

அவன் அத்தனை சுலபமாகக் கழண்டு கொண்டது அவளுக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது. என் கௌரவத்தைக் காக்கும் வேலை என்கிற மயக்கத்தில் அல்லவா இருந்தேன் என்று ரோசம் ஏற்பட்டது.

அவள் ராஜினாமா செய்ததை வீட்டில் எல்லோரும் மகிழ்ச்சி யுடன் வரவேற்றார்கள். ''கொஞ்ச நாட்களுக்கு வீட்டில் ஹாய்யாக இருக்கப் போறேன். அதுக்கப்புறம் அஞ்சு மணிக்குத் திரும்பற மாதிரி வேலை தேடறேன்'' என்றாள் அவளும்.

வீட்டில் இருக்கும் சுகத்தைக் கொஞ்ச நாட்களுக்குப் பூரணமாக அனுபவித்தாள். வீட்டின் மூலை முடுக்கெல்லாம் தூசு தட்டி அழகுபடுத்தினாள். சமைத்தாள். குழந்தை பள்ளியிலிருந்து வந்ததும் அவன் பாடத்தைக் கவனித்தாள். அதற்குத் தினமும் ஓர் அரை மணி நேரம் செலவழித்தால் போதும் என்று வியப்புடன் உணர்ந்தாள்.

ஒரு வாரம். ஒரே வாரம். அலுத்து விட்டது வாழ்க்கை. சமைத்து வீட்டை ஒழுங்குபடுத்திக் குழந்தையைக் கவனித்துக் கொண்டது போக, ஏகமாய் நேரம் கையில் நின்றது. கடவுளே! என்னுடைய அம்மா காலத்தவர்கள் எல்லாம் எப்படிப் பொழுதைக் கழித்தார்கள் என்று ஆச்சரியம் ஏற்பட்டது. அலுத்துப் போயிற்று. நான் படித்த படிப்பு வீட்டில் முடங்குவதற்காக இல்லை என்று தோன்ற ஆரம் பித்தது. வெறும் சமையலில், வீட்டு வேலையில் புத்தியை செல வழிப்பது தனது படிப்பை அவமதிப்பது போல என்று தோன்றிற்று. 'வீட்டில் சும்மாதானே இருக்கே. துணிக்கு இஸ்திரி நீயே போடேன்' என்றாள் மாமியார். பையனைப் பார்த்துக் கொள்ள, ஸ்கூலுக்கு அழைத்துச் செல்ல வேலைக்காரி எதற்கு?

இத்யாதி, இத்யாதி. கொஞ்ச நாட்களுக்கு இவையெல்லாம் நியாயமாகத் தோன்றிற்று. பிறகு அநியாயம் போல் தோன்றிற்று. இந்த வேலையெல்லாம் செய்ய ஏன் பெரிய படிப்பு படிக்க வேண்டும்?

அவள் வீட்டில் இருக்கிறாள் என்ற காரணத்தால் நேரம் காலம் இல்லாமல் வீட்டுக்கு அரட்டையடிக்க வரும் அண்டை அசல் பெண்களுக்கு டீயும் காப்பியும் போட்டே அவளுக்கு நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டு விடும் போல் இருந்தது.

முக்கியமாக வீட்டு பட்ஜெட்டில் துண்டு விழுந்தது. ஒவ்வொன்றுக்கும் கணக்கு பார்க்க வேண்டியிருந்தது. ஒரு நாள் அலுத்துப் போய் 'ஒன்பதிலிருந்து ஐந்து வரை இருக்கிற வேலையா ஒண்ணு தேடு அனு' என்றான் அருண்.

அவளுக்குத் தெரிந்த வேலை பத்திரிகை வேலை. எத்தனை முயன்றும் அவளுடைய எதிர்பார்ப்புப்படி எங்கும் கிடைக்க வில்லை.

அவள் அன்று சோர்ந்து அருணிடம் சொன்னாள்.

''இதைப் பார் என்னாலே வேலை பார்க்காம இருக்க முடியாது. நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன். எப்படியோ நீயும் நானும் குழந்தையும் அட்ஜஸ்ட் பண்ணிக்கணும்'' என்றாள்.

அருண் பேசாமல் இருந்தான். அவள் முடிவை அறிந்து கொண்டவன் போல.

அவள் மீண்டும் சுரேஷ் எதிரில் நின்றபோது, ''நீ எப்ப வேணும்னாலும் வந்து சேரலாம்'' என்றான் அவன் தாராளமாக.

'ஆனா பெண் என்கிற காரணத்தாலே எந்தச் சலுகையும் காட்ட மாட்டேன்.'

அவன் சலுகை காட்டாததால் அவள் ஆணின் இடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டதாக அர்த்தமில்லை என்று அவளுக்குத் தெரியும்.

''நா எதிர்பார்க்கல்லை சுரேஷ்!.'' என்றாள் அவள் மெல்ல.

கல்கி தீபாவளி மலர் 1990